**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**STC. No.1359/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஆனந்தன் | த–பெ | மாரிமுத்து |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 37/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | பனியன் கம்பெனி | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.05.2026**

**எதிரிகள் ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். 21.08.2022 அன்று எனது தம்பி அரவிந்தன் என்பவர் மீது உள்ள பகையை மனதில் வைத்து கொண்டு எங்கள் வீட்டில் இருந்த பாத்திரம், Scooty இருசக்கர வாகனம் ஆகியவற்றை ஆஜர் எதிரிகள் உடைத்து சேதப்படுத்தி விட்டார்கள். இது தொடர்பாக எனது மனைவி அ.சா.1 எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தார். போலீசார் நான் திருப்பூரில் இருந்த போது விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனது சகோதரர் பெயர் அரவிந்தன் என்றால் சரிதான். எனது சகோதரர் எங்களது ஊரில் கோவில் சிலைகளை சேதப்படுத்தியது தொடர்பாக ஊர் மக்கள் கையோடு பிடித்து சாக்கோட்டை காவல் நிலையத்தில் ஒப்படைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனது சகோதரர், 1ம் எதிரி மற்றும் அவரின் தாயார் லதா ஆகியோர்களை கம்பியால் அடித்து முகத்தில் காயம் ஏற்படுத்தியது சம்மந்தமாக குற்ற எண். 151/2022, சட்ட பிரிவுகள் 294(b), 324, 506(2), 4 of TNPHW Act கீழ் வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கிற்கு முன்பு லதா என்பவரை அடித்த வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனது தம்பிக்கு ஆதரவாக நானும், அ.சா..1ம் மேற்படி குற்ற எண். 151/2022 என்ற குற்ற வழக்கில் சமாதானம் பேசி மேற்படி புகார்தாரர் லதா சமாதானத்திற்கு ஒத்து வராததால் மேற்படி தாவா வழக்கை எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே எனது சகோதரர் முரட்டுத்தனமாக நடந்து கொண்டும், பொது சொத்துக்களை சேதப்படுத்தும் குணம் கொண்டவர் என்றும், எனது சகோதரரே மேற்படி வழக்கில் சொல்லப்பட்டுள்ள சேதங்களை ஏற்படுத்தி கொண்டு மேற்படி வழக்கில்இருந்து தப்பிப்பதற்காக அ.சா.1 ஐ வைத்து பொய்யாக புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தில் சொல்லியுள்ள குற்றங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, எதிரிகள் எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.06 16:49:07 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.